DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC-653/2022 | Taluk | |
| Deposition of Witness for | : PW-7 | Calling | : |
| Name | : நாகராஜன் | Religion | : |
| Father Name | : பாலுச்சாமி | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 9th March 2026.

---------------------------------------------------------------------------------------------

**(1-வது எதிரி Appearance dispensed. 2-வது எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

நான் சிவகங்கை காஞ்சிரங்கால் அம்மன்நகரில் குடியிருந்து வருகின்றேன். நான் ஒக்கூர் கண்ணத்தாள் மில்லில் வேலை செய்து வருகின்றேன். இவ்வழக்கு புகார்தாரரான வக்கீல் செந்தில்குமார் என்பவரின் வீடு என் வீட்டில் இருந்து சுமார் 10 வீடுகள் தள்ளியுள்ளது. இவ்வழக்கு 2-வது எதிரி கலாதேவியை தெரியும். புகார்தாரரின் வீட்டிற்கு அருகாமையில் தான் 2-வது எதிரியின் வீடு உள்ளது. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

Hostile (அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சியென அறிவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது).

கலாதேவி எனக்கு நன்கு பழக்கமுடையவர் என்றால் சரியல்ல. புகார்தாரரின் வீட்டிற்கும், 2-வது எதிரியின் வீட்டிற்கும் இடையே பொதுபாதை உள்ளது என்றால் சரிதான். அந்த பாதை தொடர்பாக ஏற்கனவே இருவருக்குள் பிரச்சனை உள்ளது என்றாலும், கடந்த 23.08.2021-ம் தேதி மாலை 6.45-மணியளவில் 2-வது எதிரி மற்றும் அவர் சகோதரரான 1-வது எதிரி ஆகியோர்கள் சேர்ந்து புகார்தாரரின் வீட்டின் முன்பாக நின்று கொண்டு அசிங்கமாக பேசி வீட்டின் முன்பக்க கேட்டை அடித்து தள்ளி போர்டிக்கோவில் இருந்த பூந்தொட்டி, செப்பல்ஸ்டான்டை தூக்கி போட்டு உடைத்தும், பக்கத்தில் இருந்த செங்களை எடுத்து மோட்டார் பைப் லையனை

உடைத்தும் சேதப்படுத்தி, கொலைமிரட்டல் விடுதார்கள் என்றும், அதை பார்த்த நான் உள்ளீட்ட அருகில் வசிப்பவர்கள் சத்தம் போட்டவுடன் எதிரிகள் அங்கிருந்து போய்விட்டனர் என்றாலும், சரியல்ல, நான் அப்போது வேலைக்கு சென்றுவிட்டேன். நான் வேலை பார்க்கும் மில்லில் வருகை பதிவேடு உண்டு என்றால் சரிதான். அதில் பார்த்தால் நான் அன்றைய தினம் வேலைக்கு சென்றேனா, இல்லையா என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். நான் மேற்படி சம்பவ தேதியில் சம்பவ இடத்தில் இல்லை என்றும், வேலைக்கு சென்றுவிட்டேன் என்றும், காட்டக்கூடிய மில்லின் வருகை பதிவேட்டின் ஆவணத்தை போலீசாரிடமோ, நீதிமன்றத்திலோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி சம்பவத்தை பார்த்து தடுத்துவிட்டு தற்சமயம் எதிரிகள் எனக்கு நன்கு பழக்கமுடையவர்கள் என்பதால் அவர்களை காப்பற்றும் நோக்கில் உண்மையை மறைத்து போலீசார் விசாரணையில் சொன்ன சங்கதிகளுக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், உண்மையிலயோ அன்றைய தினம் நான் வேலைக்கு சென்றிருந்தால் அதனை நிருப்பிக்ககூடிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

நான் பணிபுரியும் மில்லின் வருகை பதிவேடு என்பது அந்த மில்லுக்கு சொந்தமானது என்றால் சரிதான். அது என்னிடம் இல்லை என்றால் சரிதான்.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.